சாந்தலிங்கர் தாண்மலர் வாழ்க

திருக்கயிலாய மரபு மெய்கண்டார் வழிவழி
பேரூராதீன குருமகா சந்நிதானங்கள்
கயிலைப்புனிதர் திருப்பெருந்திரு
சாந்தலிங்க மருதாசல அடிகள்
பேரூராதீனம், பேரூர், கோயம்புத்தூர் - 641 010
9894761125 | perurmutt@yahoo.com omanbu



Holy Kailash Heritage
Meikandar Heirarchy Perur Samasthan
Mandaleshvar His Holiness
Dr. Santhalinga Marudhasala Adikal
Siruvani Main Road, Perur, Coimbatore.641 010

## அருள் வாழ்த்துரை



எல்லாம்வல்ல அருள்திரு சாந்தலிங்கப்பெருமான் இன்னருள் பெருகுக. சமயப்பணிகளைச் சீரோடும் சிறப்போடும் செய்து கொண்டிருக்கக்கூடிய சுவாமி நித்யானந்தா அவர்கள் மார்கழித் திங்கள் சித்திரை விண்மீன் நன்னாளில் பிறந்தநாள் காண்பது பாராட்டுதற்குரியது. அவர்கள் நல்ல உடல்நலத்தொடும் நீண்ட ஆயுளோடும் மெய்ஞ்ஞான அறிவோடும் சிறந்துவிளங்க இந்த நன்னாளில் இறையருளை வேண்டுகிறோம்.

சுவாமி நித்யானந்தா அவர்கள், திருக்கயிலாயப் பரம்பரை மெய்கண்ட சந்தானம் பேரூராதீனம் இருபத்துநான்காம் குருமகாசந்நிதானங்கள் கயிலைக்குருமணி தமிழ்நெறிவழிபாட்டுத்தந்தை அவர்களிடத்தில் அணுக்கத் தொண்டன்பு பூண்டு சிறந்து விளங்கியவர்கள். நம்மிடத்திலும் அன்பான முறையில் பழக்கக்கூடியவர்கள். எளிமையான குடும்பத்தில் பிறந்த அவர் வருணாசிரமத் தடை, பொருளாதாரத் தடை ஆதிய பல்வேறு தடைகளையெல்லாம் தாண்டி வந்து பிடதியில் சிறப்பான முறையில் ஆசிரமத்தை அமைத்துத் தொண்டாற்றியவர்.

மேலும் மேலும் மக்களுக்கு நலம் செய்யும் பொருட்டு அவ்வப்போது பல்வேறு வகையான புதிய புதிய உத்திகளைக் கொண்டு சமயப்பணிகளை ஆற்றி வருகின்றார். அவர்தம் சமயப்பணி தொடரவேண்டும். அவ்வகையில் அவர்களும் அவர்தம் நிறுவனமும் அந்நிறுவனத்தில் பணியாற்றக்கூடிய அன்பர்களும் வாழ்வில் எல்லா நலங்களும் வளங்களும் பெற்றுப் பெருவாழ்வு வாழவும் எல்லாம்வல்ல அருள்மிகு அம்பலவாணப்பெருமான் இன்னருளையும் அருள்திரு சாந்தலிங்கப்பெருமான் தண்ணருளையும் கயிலைக்குருமணி தமிழ்நெறிவழிபாட்டுத்தந்தை இருபத்துநான்காம் குருமகாசந்நிதானங்களின் குருவருளையும் நினைந்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.

வேண்டுந்தங்களன்பு,

அன்புள்ள,

சாந்தலிங்க மருதாசல